கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி: **05.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (சுதாகர், த/பெ.சிவசங்கர்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**16-** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்தேன் என்றால் NLC-ல் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்துக்களை மீட்கக் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

(2) வழக்கின் சொத்தின் சர்வே எண்கள் என்ன என்றால், 1-ஆம் அயிட்டம் 47/1, 70/3, 70/3A, 70/3b, 70/6, 193/2, 82/3, 82/6. வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் கிருஷ்ணசாமி முதலியாருக்கு பாத்தியம். ஜனார்த்தனன் முதலியார், கிருஷ்ணசாமி முதலியார் நிர்வாகத்திற்கு தர்மகர்த்தாவாக இருந்தார் என்றால் சரிதான். ஜனார்த்தனன் முதலியார் 2-ஆம் பிரதிவாதி மூலமாக சார்பு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று வழக்கு சொத்துக்களை விற்றார் என்றால் அது ஒருதலையான தீர்ப்பு. மேற்சொன்ன வழக்கில் நான் தரப்புனரான என்றால் இல்லை. அதில் நான் தரப்பினர் இல்லை என்பதை எப்போது அறிந்துகொண்டேன் என்றால் வழக்கு தீர்ப்பான பிறகு அறிந்து கொண்டேன். அந்த வழக்கு கடலூர் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த தீர்ப்புக்கு எதிராக நான் மேல்முறையீடு ஏதும்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.05 18:19:10 +0530

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

(3) சார்பு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சார்பு நீதிமன்ற தீர்ப்பு நீக்கறவு செய்ய உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல.

(4) 16-ஆம் பிரதிவாதி 7-ஆம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தினை 04.03.2011-ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 16ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 1 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார். இன்றளவும் 16-ம் பிரதிவாதி தான் அந்த சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் இல்லை. 7-ம் பிரதிவாதியும் அனுபவத்தில் இல்லை. 16ம் பிரதிவாதி அதில் பயிர் வைத்து வருகிறார் என்றால் சரியல்ல.

(5) அசல் வழக்கு எண்.32/4 ல் 16-ம் பிரதிவாதி தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன ஆனது என்றால் அதில் ராமச்சந்திரன் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற்றுள்ளார்.

(6) வா.த.சா.ஆ 23 ஆன அந்த தீர்ப்பாணையின் 3 ஆம் பத்தியில் பிரதிவாதிகள் சட்ட வழிமுறைகளின் கீழ் சுவாதினம் எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16 ஆம் பிரதிவாதி 2011 லேயே கிரையம் வாங்கி இருக்க அவரை நான் 2025 ல் தான் தரப்பினராக சேர்ந்த்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

(7) எனது வழக்குரையில் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.55 லட்சம் பெறும் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தாக்கல் செய்து 20

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.05 18:19:14 +0530

வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் மதிப்பு இந்நீதிமன்ற வரம்பிற்கு வராது என்றால் சரியல்ல. வா.த.சா. 26 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 16 ஆம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்ததற்கு எதிராக வழங்கப்பட்ட புகார் மனு.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.05 18:19:18 +0530

***Additional District Munsif , Cuddalore.***